## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிசெல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **ஜெகதீஸ்வரன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**21.4.2026 OS.32/2021 பி.வா.சா.3. ஜெகதீஸ்வரன்**

**2ம் பிரதி வாதி தரப்பு முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதிகள் தரப்பு 3 ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) கடந்த 18.05.1984 ம் தேதி திரு.சங்கு சேர்வை மற்றும் மற்ற நபர்கள் சேர்ந்து வழக்கு ஓட்டு வீட்டை திரு.செ.சேங்கை அம்மாளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவண எண். 576/1984 ன் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி கிரைய ஆவண எண். 576/1984 ன் அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) கடந்த 16.08.1985 ம் தேதியன்று திரு.சங்கு சேர்வை மற்றும் மற்ற நபர்கள் சேர்ந்து வழக்கு காலிமனையை திரு. செல்வம் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவண எண். 1254/1985 ன் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி கிரைய ஆவண எண். 1254/1985 ன் அசல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) கடந்த 31.12.2000 ம் தேதி திரு.செல்வம் அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படிதிரு.செல்வம் அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4) கடந்த 21.06.2008 ம் தேதி திரு. செல்வம் அவர்களின் இரண்டாம் மனைவி திருமதி. பாலம்மாள் அவர்களின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி திருமதி. பாலம்மாள் அவர்களின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.21 13:49:47 +0530

5) கடந்த 05.01.2017 ம் தேதி திரு. காளிமுத்து அவர்களின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி திரு. காளிமுத்து அவர்களின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6) கடந்த 22.12.2020 ம் தேதி 2ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் சேர்ந்து ஏற்படுத்திக் கொடுத்த பதிவு பாகபாத்திய விடுதலை ஆவணம் எண். 4237/2020 ன் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி பாகபாத்திய விடுதலை ஆவணம் எண். 4237/2020 ன் அசல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7) கடந்த 21.01.2021 ம் தேதி தாவா சொத்துக்குரிய மின் இணைப்பு எண். 143 க்கு 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்திய மின் கட்டண ரசீது எண்ணம் 2 அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி மின் கட்டண ரசீது எண்ணம் 2 அசல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8) கடந்த 22.04.2021 ம் தேதி தாவா சொத்தில் உள்ள ஓட்டு வீட்டை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டுவதற்காக 3ம் பிரதிவாதியிடம் பெறப்பட்ட கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் கட்டிட வரைபடம் அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் கட்டிட வரைபடம் அசல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9) கடந்த 20.05.2021 ம் தேதி தாவா சொத்துக்கு 2ம் பிரதிவாதி பெயரில் 3ம் பிரதிவாதி கொடுத்த வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி வீட்டு வரி ரசீது அசல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10) கடந்த 21.12.2023 ம் தேதி தாவா சொத்துக்கு 2ம் பிரதிவாதி பெயரில் 3ம் பிரதிவாதி கொடுத்த வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி வீட்டு வரி ரசீது அசல் வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையோடு பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.21 13:49:57 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam